### மெட்ரோ ரெயில் நிலையங்களில்

# ஸ்மார்ட் கார்டு மூலம் பார்க்கிங் கட்டணம் செலுத்தலாம்

## வாகனம் நிறுத்தும் பிரச்சினையை தடுக்க விரைவில் அறிமுகம்

சென்னை, மே. 18–

மெட்ரோ ரெயில் களில் பயணிகளை அதி கரிக்க பல்வேறு நட வடிக்கை களை நிர்வாகம் மேற் கொண்டு வருகிறது. ஷேர் கார், ஷேர் ஆட்டோ, சைக்கிள், எலக்ட் ரானிக் ஸ்கூட்டி போன்ற வசதி கள் அளிக்கப்பட்டன.

**'பார்க்கிங்' வசதி**

மெட்ரோ ரெயில் நிலை யங்களை பயன்படுத்தும் பயணிகள் அங்கிருந்து அலுவலகம், சென்று வரவும், தொடர் பயணங்களை மேற்கொள்ள வசதியாக இணைப்பு போக்குவரத்து வசதியினை வழங்கி உள்ளது.



மெட்ரோ நிலையங் களுடன் ஸ்மால் பஸ், மாநகர பஸ்களை இணைத் துள்ளது. மேலும் பயணிகள் தங்கள் கார், இருசக்கர வாகனங்களை நிலையத்தில் விட்டு சென்று பயணம் செய்ய 'பார்க்கிங்' வசதியும் அளிக்கப் படுகிறது.

**நெருக்கடியான இடங்கள்**

மெட்ரோ ரெயில் நிலையங் களை ஒட்டியுள்ள காலி இடங்களில் வாகனங்களை பார்க்கிங் செய்ய இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒருசில ரெயில் நிலையங்களில் வாகனம் நிறுத்துவதற்கு கடுமையாக போட்டி ஏற்படு கிறது.

வண்ணாரப்பேட்டை, மண்ணடி உள்ளிட்ட நெருக் கடியான இடங்களில் உள்ள நிலையங்களில் பார்க்கிங் செய்வதில் பல்வேறு பிரச் சினைகள் ஏற்படுகின்றன.

**ஸ்மார்ட் கார்டு**

ஒருசில இடங்களில் பயணம் செய்யாத அப்பகுதி வியாபாரிகள் ரெயில்வே இடத்தில் 'பார்க்கிங்' செய்து வருகின்றனர். கார், மோட் டார் சைக்கிள் போன்றவற்றை நிறுத்திவிட்டு சென்று வரு கின்றனர்.

இவற்றை எல்லாம் முறைப்படுத்த பார்க்கிங் கட்டணத்தை ஸ்மார்ட் கார்டு மூலம் செலுத்த திட்டமிடப் பட்டுள்ளது. பரீட்சார்த்த முறையில் இதனை செயல் படுத்தியதில் ஒருசில குறை கள் இருப்பதை மெட்ரோ ரெயில் நிர்வாகம் கண்டு பிடித்துள்ளது. அவற்றை சரிசெய்து அனைத்து ரெயில் நிலையங்களிலும் ஸ்மார்ட் கார்டு மூலம் பார்க்கிங் கட்ட ணம் செலுத்தும் திட்டத்தை விரைவில் தொடங்க இருப்ப தாக அதிகாரிகள் தெரிவித் தனர்.

மேலும் அவர்கள் கூறிய தாவது:–

**அதிக போட்டி**

தற்போது மாதம் அல்லது தினசரி அடிப்படையில் டோக் கன் முறையில் பார்க்கிங் கட்டணம் செலுத்தும் முறை உள்ளது. ஸ்மார்ட் கார்டு திட்டத்தை செயல்படுத்த தொடங்கினால் பயணிகளின் நேரம் மிச்சமாகும்.

மெட்ரோ ரெயிலை பயன் படுத்தக்கூடிய பயணிகளுக்கு மட்டும் தான் பார்க்கிங் வசதி அளிக்கப்படும். மெட்ரோ ரெயில் நிலைய பார்க்கிங் இடத்துக்கு அதிக போட்டி உள்ளது. பலர் வாகனங்களை நிறுத்துகின்றனர்.

மெட்ரோ ரெயில் நெட்ஒர்க் அமைந்துள்ள 45 கி.மீ. தூர அளவில் 8000 வாகனங்கள் தினமும் பார்க் கிங் செய்யப்படுகின்றன. ஒருசில நிலையங்களில் வழக்க மாக வரும் பயணிகளுக்கு வாகனங்களை நிறுத்த இடமில்லாத நிலை ஏற்படு கிறது.

**மோதல் போக்கு**

மாதாந்திர பாஸ் வசதி பெற்றவர்கள் வாகனங்களை நிறுத்த முடியாமல் ஊழியர் களிடம் மோதல் போக்கில் ஈடுபடும் நிலை உருவாகி வருகிறது. ஸ்மார்ட் கார்டு நடைமுறைப்படுத்தப்பட்டால் இந்த கார்டை வைத்திருப்ப வர்கள் மட்டுமே வாகனத்தை உள்ளே கொண்டு வர முடி யும். பார்க்கிங் பகுதியில் நிறுத்த முடியும். மற்றவர்கள் உள்ளே நிறுத்த முடியாது.

இவ்வாறு அவர்கள் கூறி னர்.